செ.வெ.எண்:10 நாள்:05.04.2018

**மாவட்ட அளவிலான விளையாட்டு விடுதிகளில் மாணவ / மாணவியர் சேர்க்கை 2018 –2019**

**பத்திரிக்கை செய்தி**

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாடு மற்றும் இளைஞர் நலத் துறையின் மூலமாக பள்ளிகளில் பயிலும் மாணவ/ மாணவியர்களுக்கு விளையாட்டுத் துறையில் சாதனைகள் படைப்பதற்கு ஏற்ப நல்ல பயிற்சி மற்றும் தங்குமிட வசதியுடன் சத்தான உணவுடன் கூடிய விளையாட்டு விடுதிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இதுகுறித்த செய்தியினை கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு த.அன்பழகன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவிக்கையில், **மாணவர்களுக்கான** விளையாட்டு விடுதி மதுரை, திருச்சி, திருநெல்வேலி, கிருஷ்ணகிரி, கோயம்புத்தூர், கடலூர், தஞ்சாவூர், அரியலூர், தூத்துக்குடி, சிவகங்கை, தேனி, இராமநாதபுரம், உதகமண்டலம், விழுப்புரம், சென்னை, நெய்வேலி மற்றும் நாமக்கல் ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன. **மாணவியருக்கான** விளையாட்டு விடுதி ஈரோடு, திருவண்ணாமலை, திண்டுக்கல், நாகர்கோவில், பெரம்பலூர், தேனி, புதுக்கோட்டை, தருமபுரி, சென்னை, மற்றும் நாமக்கல் ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன.

மேற்காணும் விளையாட்டு விடுதிகளில் உள்ள விளையாட்டுகளில் பயிற்சி பெற்று சிறந்த விளையாட்டு வீரராக விளங்குவதற்கு 7– ம் வகுப்பு, 8– ம் வகுப்பு, 9 –ம் வகுப்பு மற்றும் 11– ம் வகுப்பு சேர்க்கைக்கான மாவட்ட அளவிலான தேர்வு 02.05.2018 முதல் 04.05.2018 வரை நடைபெற உள்ளது.

**மாணவர்களுக்கு** தடகளம், இறகுப்பந்து, கூடைப்பந்து, குத்துச்சண்டை, கிரிக்கெட், கால்பந்து, வாள்சண்டை, ஜிம்னாஸ்டிக்ஸ், கைப்பந்து, ஹாக்கி, நீச்சல், டேக்வாண்டோ, கையுந்துபந்து, பளுதூக்குதல் கபாடி மேசைப்பந்து, டென்னிஸ், ஜீடோ குவாஷ் மற்றும் வில்வித்தை விளையாட்டிற்கும், **மாணவியர்களுக்கு** தடகளம், இறகுப்பந்து , கூடைப்பந்து, குத்துச்சண்டை, கால்பந்து, வாள்சண்டை, கைப்பந்து, ஹாக்கி, நீச்சல், டேக்வாண்டோ, கையுந்துபந்து, பளுதூக்குதல், கபாடி, டென்னிஸ் , ஜீடோ மற்றும் ஸ்குவாஷ் ஆகிய விளையாட்டுகளுக்கு சேர்க்கை நடைபெற உள்ளது.

எனவே விளையாட்டில் சிறந்து விளங்கும் மற்றும் ஆர்வம் கொண்டுள்ள மாணவ/மாணவியர் விண்ணப்பப்படிவங்களை கரூர் மாவட்ட விளையாட்டு அலுவலகத்திலோ (அல்லது) இணையதள முகவரியிலோ பதிவிறக்கம் செய்து பெற்றுக் கொள்ளலாம். தொலை பேசி எண். 9444753260 (இணையதள முகவரி www.sdat.tn.gov.in)

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை கரூர் மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர், மாலாநாயக்கன்பட்டி கிராமம், பாரதிதாசன் நகர்– 4 வது தெரு, தான்தோன்றிமலை – 5 என்ற முகவரிக்கு நேரிலோ (அல்லது) தபால் மூலமாகவே வருகிற 20.04.2018 ஆம் தேதிக்குள் அனுப்பிவைத்து பயன்பெற வேண்டுமாறு கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு த.அன்பழகன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவிக்கின்றார்.

வெளியீடு:
செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,
கரூர்.